மேன்மைக்கு முன்னானது தாழ்மை

அப்போஸ்தலர். S. ஏசுதாசன்

Transcribed by GTG,NJC Bangalore

மேன்மைக்கு முன்னானது தாழ்மை

செய்தி:

அப்போஸ்தலர் S- ஏசுதாசன்

புதிய எருசலேம் சபை

நாகர்கோவில்

Ph- 8903131260, 9489529462

www.newjerusalemnews.in

Special sermon as telecasted on Nambikkai TV
on 26 Nov 2020

Video sermon transcribed by
"Glory To God (GTG)"
NJC Bengaluru

இந்த வீடியோ செய்தியை njcngl Youtube channel - ல் காணலாம்.

மேன்மைக்கு முன்னானது தாழ்மை

அப்போஸ்தலர் S- ஏசுதாசன்

அருமையானவர்களே! பெரும்பாலும் மனிதர்கள் உயர்வடைய வேண்டும், ஆசீர்வதிக்கப்படவேண்டும், பெரியவர்களாக இருக்க வேண்டும் என்று எப்போதும் நினைவு கொண்டிருப்பர். இதுவே மனிதனுடைய எண்ணங்களாக இருக்கும். தேவனுடைய பிள்ளைகளாக வாழ்பவர்களுக்குக்கூட அந்த எண்ணமே பலவேளைகளில் உண்டு. எந்த மனிதனும் தாழ்ந்து போக வேண்டும் என்று விரும்ப மாட்டான், ஆசீர்வதிக்கப்பட்ட வேண்டும் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றுதான் பெரும்பாலும் விரும்புவான்.

தேவ பிள்ளைகளுக்கும் இது பொருந்தும். இயேசுவின் சீஷர்கள் மத்தியில் கூட, அவர்கள் இயேவுடன் வழி நடந்து கொண்டிருந்தபோது அவர்களுக்குள்ளேயே கூட இப்படிப்பட்ட பேச்சுவார்த்தை நடந்தது . நம்மில் யார் பெரியவராக இருப்பார் என்ற பேச்சு வார்த்தை அவர்களுக்குள்ளே நடந்தது. அவர்கள் இயேசுவினிடத்தில் வந்தபோது அவர்கள் வழியில் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதையெல்லாம் இயேசு கேட்டறிந்து அவர்களுக்கு சரியான பதிலை அவர் சொன்னார், தெளிவுபடுத்தினார்.

ஒரு மனிதன் உயர்வடைய வேண்டும் என்றால், மேன்மை பெற வேண்டுமென்றால் அவன் செய்ய வேண்டிய காரியம் என்ன? அவன் தன்னை தாழ்த்த வேண்டும், தன்னைத் தானே உயர்த்திக் கொள்ள கூடாது. தன்னை தாழ்த்த வேண்டும், தன்னை தாழ்த்துகிறவன் கர்த்தரால் உயர்த்தப்படுவான்.

தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் , உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்பதை நாம் நன்றாய் அறிய வேண்டும். நாம் உலக ரீதியாகவும் இதன் உண்மையைக் கண்டுகொள்ள இயலும்.

உயர்வடைய வேண்டும் மேன்மை அடையவேண்டும், தான் செய்யும் வேலையிலே வேலையுயர்வு வரவேண்டும். எனக்கு மேலே வேலை செய்கிற அவருடைய வேலையை நான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற பலர் அவ்வேலையை அபகரிக்க பலவிதமான உபாய தந்திரங்களை செய்கிறார்கள். அவரை அந்த இடத்தில் இருந்து மாற்ற, அகற்ற பல பிரயாசங்களை மேற்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட பக்க வழிகளை தேடுகிறதினால் அவர்கள் உயர்வை, மேன்மையை அடைவதே இல்லை .

ஒரு மனிதனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் இறைவனுடைய கரத்திலே இருக்கிறது என்று நாம் தெளிவாக நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும்.

இந்த வார்த்தைகளை கேட்கிற அருமையானவர்களே ! நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமானாலும் சரி, உலகப் பிரகாரமான, சரீரப்பிரகாரமான ஜீவியமானாலும் சரி , நாம் உயர்வடைய வேண்டும் என்றால் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன ?. அது எவ்விதம் என்று நாம் சில விஷயங்களை கவனித்து அறிந்து கொள்ள கர்த்தர் நம் அனைவருக்கும் கிருபை செய்வாராக.

நமது அருமை இரட்சகர் சொல்லுகிற வார்த்தை என்ன என்பதை கவனியுங்கள்.

தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார். (லூக்கா 14:11)

ஆண்டவருடைய திருவாக்கு என்ன சொல்லுகிறது, தன்னைத்தான் உயர்த்தி கொள்ளுகிறவன் ஒருபோதும் உயர்வடைய மாட்டான், அவன் தாழ்ந்து போய் விடுவான். தன்னை தானே யார் உயர்த்து கிறானோ, அவன் எவ்வளவு அறிவுடையவனாக , எவ்வளவு மேன்மை கூடியவனாக ,எவ்வளவு அதிகமாக அறிந்தவனாக இருந்தாலும் அவன் தாழ்த்தப்படுவான்.

ஆனால், வாழ்க்கையில் தாழ்ந்த சிந்தையாகிய மனப்பான்மை உடைய ஒருவன் தன் வாழ்க்கையில், பேச்சில், தன் இருதயத்தில் தாழ்மையுடையவனாய் இருந்தால், அவனை கர்த்தர் உயர்த்தி விடுவார் என்று நாம் உலகில் நடக்கும் நடைமுறையில், அனுபவங்களில் நாம் கவனித்து அறிகிறோமே.

ஒரு மனிதன் உயர்வடைய வேண்டும் என்றால் அவன் தன்னை தாழ்த்த வேண்டும். ஒருவரை பார்க்கும்போது இவர்கள் உயர்வடைய போகிறார்கள், உயர்ந்து விடுவார்கள் என்று நாம் அறிந்து கொள்ளலாம். மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்று சொல்லப்பட்டிருக்கிறதே. ஒருவன் உயரப்போகிறான் என்பதை நாம் எப்படி தெரிந்து கொள்வது.

அவனில் உண்டாயிருக்கிற அவனுடைய தாழ்மை தானே அதற்கு அடையாளம். எவ்வளவு கல்வி அறிவு, எவ்வளவு ஞானம் அவனுக்கு இருக்கிறதே, இருந்தபோதிலும் இவ்வளவு தாழ்மை உள்ளவனாக இருக்கிறானே என்று பிறர் எண்ணி ஆச்சரியப்படுகிறார்கள் அல்லவா? இப்படிப்பட்ட தாழ்மை உடைய அவன் நிச்சயம் உயர்ந்து விடுவான். கர்த்தர் அவனை உயர்ந்த ஸ்தானத்தில் வைப்பார் என்று வசனம் சொல்லுகிறது.

இரண்டு பேர்கள் ஜெபம் பண்ண போனார்கள். தேவாலயத்திற்கு போன அவர்கள் இருவரும் ஜெபம் பண்ண போய் நின்றார்கள் . ஒருவன் பரிசேயன் மற்றொருவன் ஆயக்காரன். பரிசேய பாரம்பரியம் உள்ள அம்மனிதன் ஜெபம் பண்ணினான் . என்ன ஜெபம் பண்ணினான் தெரியுமா? தன்னிடத்தில்

இருக்கிற தகுதிகளை குறித்து, கிறிஸ்துவ பண்பாடுகளுக்கு உள்ளான பக்தி வழக்கங்கள் குறித்து, அவனுக்குப் பெருமையாக இருந்தது . நான் வல்லமையாக ஜெபிக்கிறேன், ஒழுங்காக கர்த்தருக்கு காணிக்கை செலுத்துகிறேன். நான் சரியாய் இருக்கிறேன் , நான் உயர்ந்தவன் என்று கருதினதுமன்றி அவன் மனதில் சொன்னது . என் அருகில் இங்கு இருக்கிறானே இந்த ஆயக்காரனைப்போல நான் இல்லை. அதற்காக நான் கர்த்தரை ஸ்தோத்திரி கிறேன் என்று அவன் சொன்னான்.

தேவன் இவைகளை பார்த்தார் . இருவருடைய மனதையும் தேவன் சீர்தூக்கி பார்த்தார்.தேவன் சுமுத்திரையானா தராசை வைத்து மனிதனுடைய இருதயத்தை அவர் நிறுத்து பார்க்கிறவராக இருக்கிறார் அல்லவா?

ஆகவே அவர் இருதயத்தை கவனித்தார், அவர்களுடைய அகங்காரத்தை, பெருமையை பிறரை அற்பமாக எண்ணுகிறதான அந்த சுபாவத்தை கர்த்தர் கண்டார். அவனுக்குள் இருந்த அந்த தாழ்மையற்ற மேட்டிமையான சுபாவத்தை கண்ட கர்த்தர், அந்த பரிசேயனை அல்ல அவனால் அற்பமாக எண்ணப்பட்ட ஆயக்காரனையே நீதிமானாக்கினார்.அவன் தான் நீதிமான் இவன் நீதிமான் அல்ல என்று ஆண்டவர் சொன்னார்.

ஒரு மனிதன் உயர்வடைய தேவன் வழி வகுத்திருக்கிறார். அவ்வழி என்னவென்றால் தாழ்மை, தாழ்மையே அவ்வழி. ஒரு மனிதனின் உயர்வு அடைவதற்கு அதுவே வழி , அதுவே படி. ஒரு மனிதன் தன்னை தாழ்த்திவிட்டால் ஆண்டவர் அவனை உயர்த்தி விடுவார். இயேசுகிறிஸ்து தான் அதற்கு மாதிரி, அதற்கு அவர் தான் வழிகாட்டி.

அவரை தேவன் என்று யூதர்கள் அறியவில்லை. இன்றும் இயேசுவின் சொந்த ஜனங்களாகிய யூதர்கள் அவரைத் தேவனென்று ஏற்றுக்கொள்ளவில்லை. தேவன் மனித உருவம் எடுத்து வந்து, இவ்வுலகத்தில் வாழ்ந்ததும். ஒரு ஏழை தச்சனின் குடும்பத்தில் அவர் பிறந்தபடியால், அவருடைய வாழ்க்கை அவ்வளவு எளிமையாக , ஏழ்மையாக இருந்ததினால் அவரை யாரும் கண்டு கொள்ளவில்லை. அவர் தன் பரலோக பிதாவின் சித்தத்தை செய்ய அல்லவா வந்தார். அவருக்கு தான் எங்கிருந்து வந்தோம் என்றும், தான் எங்கு போகப் போகிறோம் என்றும் அவருக்குத் தெரியும். ஆனாலும், இயேசு கிறிஸ்து மிகவும் தன்னை தாழ்த்தினார்.

சிலர் தாழ்ந்து இருப்பர்கள். வசதி வாய்ப்புகள் பெருகி, பெரிய உத்தியோகமோ, அந்தஸ்தோ கிடைத்த உடனே அவர்களுக்கு மேட்டிமை வந்துவிடும். மேட்டிமை வந்தவுடன் தான் முன்பு பெற்ற மேன்மையை இழந்துவிடுகிறார்கள். அவர்களின் மேட்டிமையே தாழ்வை உண்டுபண்ணி விடுகிறது.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;
(பிலிப்பியர் 2:5)

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,
(பிலிப்பியர் 2:6)

தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.
(பிலிப்பியர் 2:7)

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.
(பிலிப்பியர் 2:8)

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,
(பிலிப்பியர் 2:9)

இந்த சத்தத்தைக் கேட்கின்ற அருமையானவர்களே! கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை உங்களிலும் இருக்கக்கடவது. அவருடைய சிந்தை தான் என்ன?. அவருடைய சிந்தை தாழ்மையின் சிந்தைதான்.

அவர் தன்னை தாழ்த்தினபடியால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி , எல்லா நாமத்திற்கு மேலாக உயர்த்தி பூமியில் உள்ளோர், வானோர், பூதலத்தோர் யாவருடைய முழங்கால்களும் முடங்கும்படி செய்தார்.

போதனைகள் ஏராளம் செய்யப்படுகிறது. போதித்தபடி நடக்க வேண்டுமே. கைக்கொள்ள வேண்டுமே. இயேசுவோ தாழ்மைக்காக தன்னையே மாதிரியாக காண்பித்தார். இயேசு ஏன் மாதிரி காண்பித்தார்? எதற்காக வேதத்தில் இந்த வசனம் எழுதப்பட்டது. உங்களுக்கும் எனக்கும் ஆலோசனையாக, அறிவுரையாக இவைகள் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டான் என்பது போல,தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான் என்பது போல இவை நம் மனதில் ஆழமாய் பதிவதாக.

ஆண்டவர் தன்னைத்தானே சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தினார்.பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுவின் நாமம் மகிமைப்படும்படி எல்லா நாமத்திற்கும் மேலாக இருக்கும்படி பிதா அவரை உயர்த்தினார். அவர் நாமத்தை உன்னதம் வரைக்கும் உயர்த்தினார். அவருக்கு

முன்பாக முழங்கால்கள் முடங்கவும், எல்லா நாவுகளும் அவரை அறிக்கை செய்யவும், அவர் தேவனுடைய குமாரன் என்று யாவரும் சொல்லும்படியாக பிதாவாகிய தேவன் செய்தார் .

இந்த சத்தத்தைக் கேட்கின்ற அருமையானவர்களே. உயர்வடைய வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் உண்டு . உயர்த்தப்பட வேண்டும் பெரியவர்களாக வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் உண்டு. ஒருவரும் வேண்டாமென சொல்லுகிறது இல்லை.

உயர்வடைய வேண்டும் என்பதற்காகத்தானே அத்தனை பிரயாசைப்படுகிறார்கள். கல்வியிலே உயரவேண்டும், செல்வத்திலே உயரவேண்டும், உத்தியோகத்தில் உயர்வு வேண்டும், இந்த உலகத்தில் எல்லாவற்றிலும் உயர வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் மனிதர்கள் இரவுப்பகலாக ஆசைப்படுகிறார்கள்.

அருமையானவர்களே! தேவ ஜனங்களே, மக்களே , உங்களுக்கு சொல்லுகிற காரியம் என்னவென்றால், உயர்த்தப்படுகிறதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையே. உயர்த்தப்பட வேண்டுமா? நாம் நம்மை தாழ்த்த வேண்டும்.

எங்கள் ஊழியத்திலே நடந்த ஒரு சம்பவம். பெற்றோர் சில பிள்ளைகளை ஜெபம் பண்ண கூட்டிக் கொண்டு வந்தார்கள். "என்னுடைய பிள்ளை நன்றாகத்தான் படித்துக்கொண்டிருந்தாள். பிள்ளை பஸ்ட் கிளாஸ், ஸ்கூல் பஸ்ட் என்று நன்றாக உயர்ந்த நிலையிலேயே தான் இருந்தாள். என் பிள்ளைக்கு அடுத்தபடி இரண்டாவது மதிப்பெண் வாங்குகிற பிள்ளை, தான் அந்த முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்பதற்காக அவர்களின் பெற்றோர்கள் சேர்ந்து மந்திரவாதிகளை கொண்டுவந்து செய்வினைகளை செய்து, என்னுடைய பிள்ளை பாட புத்தகத்தை படிக்க தொடர்ந்தால் தூக்க மயக்கம், படிக்க முடியாதபடி சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள், காரணம் அவர்களுடைய பிள்ளை எப்படியாவது அந்த முதல் இடத்துக்கு வந்து விடவேண்டும் என்பதற்காக இப்படி செய்து விட்டனர். ஆகவே இந்த பிரச்சனை என் பிள்ளையை தாக்காதபடி தடுக்க வேண்டும், ஜெபியுங்கள் " என்று கேட்டார்கள்.

நாம் மட்டும் தான் முதலில் இருக்க வேண்டும். நமக்கு எல்லா புகழும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த குடும்பத்தினர், அதாவது அந்த பிள்ளையை சார்ந்தவர்கள் இப்படி செய்வினை செய்கிறார்கள். அந்த பிள்ளையின் பெற்றோர் தன் பிள்ளையின் பலவீனத்தை மாற்ற ஜெபம் பண்ண வந்திருந்தார்கள். நாங்களும் ஜெபம் பண்ணினோம். மாந்திரீகமும் குறி சொல்லுதலும் ,தேவ ஜனங்களுக்கு விரோதமாக இவைகள் பலிக்காதல்லவா? மந்திரவாதிகளால் செய்யப்பட்ட மந்திரீக காரியம் எதுவும் அவர்களை மீண்டும் தாக்கவில்லை, பலிக்கவில்லை .

இதை போன்றே பல பிரச்சனைகள் , இது போன்ற பிள்ளைகளுக்கு விரோதமாக பொறாமைகளும் போட்டிகளும் உலகத்தில் இன்றும் உண்டு. ஒரே நோக்கம் என்னவென்றால், எப்படியாகிலும் தான் உயர்ந்திருக்க வேண்டும். அவர்களை விட நான் பெரியவனாக இருக்க வேண்டும் என்பது மனிதனுடைய எண்ணம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்து அவர் போதித்தது மாத்திரமல்ல அவர் ஜீவியத்திலும் வாழ்ந்து காண்பித்தார். அவர் வாழ்ந்து காண்பித்த மாதிரியுள்ள வாழ்க்கைதான் மனிதர்களுக்கு இன்றும் வழிகாட்டிக்கொண்டு இருக்கிறது, ஒருவர் உயர்த்தப்படுவதற்கான மாதிரியாக வைக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் உயர்வடைய வேண்டும் என்பதற்காக கர்த்தராகிய இயேசு இந்த ஈன உலகத்தில் பிறந்து வாழ்ந்து, நமக்காக அடிமையின் ரூபமெடுத்து தாழ்த்தி தன்னை ஒப்புக் கொடுத்தார்.

அருமையான மக்களே ! சத்தத்தை கேட்கிறவர்களே! தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று இறை வேதம் சொல்லுகிறது. உயர்வடைய வேண்டும் என்று விரும்புகிற தேவனுடைய பிள்ளைகளே! தேவ ஜனங்களே! தான் உயர்த்தப்பட வேறு குறுக்கு வழிகளை கையாளாதபடி முறையான பிரகாரம் நமது வாழ்க்கை அமைத்துக் கொண்டால் நாம் உயர்த்தப்படுவோம் என்று இறைவாக்கு கற்பிக்கிறது .

கர்த்தர் எங்கே பார்க்கிறார் தெரியுமா? கர்த்தர் உயர்ந்தவராக இருந்தும், உன்னதத்தில் வாசம் பண்ணுகிறவராய் இருந்தும் , எங்கே பார்க்கிறார் என்றால், தாழ்மையானவர்களையே நோக்கி பார்க்கிறார். எங்கே தாழ்மை இருக்கிறதோ? அவர்களையே நோக்கி பார்க்கிறார் என்பதை நாம் அறிவோம் அல்லவா ? நாம் அறிந்த உண்மை தானே இது?.

விவசாயம் செய்கிறவர்களுக்கு மிகவும் நன்றாக தெரியும், தண்ணீரை கால்வாயில் திறந்து விட்டால் அது தாழ்ந்த இடம் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கேதான் அதிவேகமாக போய் சேர்ந்து விடும். மேடாய் இருக்கும் இடத்தில் நீர் பாய்ச்ச வேண்டும் என்று எவ்வளவு தான் பிரயாசைப்பட்டாலும் , அது மடையை உடைத்துக்கொண்டு தாழ்ந்த இடத்தில் போய் சேரும் என்பது நமக்கு தெரியும் அல்லவா ?.

அதே வண்ணமாக வாழ்க்கையிலே ஒன்றும் இல்லாதவர்களை போல தன்னுடைய வாழ்க்கையில் தன்னை தாழ்த்தி தாழ்மையோடு நடப்பார்களேயானால் அவர்கள் நிச்சயம் மேன்மையடைவர். பத்து பேர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஒருவன் பேசாமலேயே அமைதியாய்

இருந்தான் என்றால் மற்ற ஒன்பது பேருடைய கண்ணோட்டமும் அவன் மேலே இருக்கும். இவன் மிகவும் விஷயம் தெரிஞ்சவன் போலும், அவனுக்குள் ஏதோ விஷயம் இருக்கிறது என்று எண்ணுவர். அவன் ஒன்றும் தெரியாதவனாக இருந்தாலும் சரிதான், அவன் மேன்மையாகவே எண்ணப்படுவான் . ஏனெனில், தன்னை தாழ்த்தி மற்றவர்கள் பேசுதை அவன் கேட்க கவனமாய் இருக்கிறான் என்பதே காரணம்.

யாக்கோபு சொல்லுகிறார், கேட்கிறதற்கு தீவிர படுங்கள் , பேசுகிறதற்க்கு பொறுமையா இருங்கள் என்று. அப்போஸ்தலன் யாக்கோபு எழுதுவதுபோல் பேசுவதற்கு பொறுமையாய் இருங்கள். அப்படி நீங்கள் இருக்கும்போது நீங்கள் மேன்மை அடைந்து விடுவீர்கள். உங்களுடைய இருதயமாகிய பொக்கிஷமானது நிறைந்து நிறைந்து வழிந்து, பொங்கி வழிகிறது போல இருக்கும்.

ஒருவர் பேசி முடிப்பதற்கு முன்பாக முந்தி போட்டி போட்டு பேச முற்படுகிறவர்கள் வெறும் பாத்திரமாக தான் இருக்கிறார்கள். அப்படியே அவர்கள் வெறும் பாத்திரமாகவே மாறிவிடுவார்கள். மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்று இறைவாக்கு சொல்லுகிறது. பெரிய பெரிய அறிஞர்கள் தெருவிளக்கில் படித்து பெரிய மேதையாக மாறிவிட்டார்கள் என்று சொல்வதை நாம் கேள்விப்படுகிறோம் அல்லவா?. பெரிய இடத்தில் மேன்மையாக இருந்தும் அவர்கள் ஒன்றும் இல்லாதவர்களைப் போல அமைதியாக தாழ்மையாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களே தேவனால் உயர்த்தப்படுகிறார்கள்.

ஏழைகளாக எளியவர்களாக இருந்தாலும் இந்நிலையை அவர்கள் தங்களுடைய தாழ்மையுள்ள சிந்தையால் அடைந்து உயர்ந்தனர். நீங்கள் ஏழைகளாக இருக்கிறோம் என்று கவலைப்படாதீர்கள். பிறர் இப்படி இருக்கிறார்கள், நானோ இப்படி இருக்கிறேனே என்று நினைத்து சோர்ந்து போகாதீர். திடனாயிருங்கள். ஆண்டராகிய இயேசுவை நோக்கி பாருங்கள். அவர் இந்த லோகத்தில் வரும்போது அடிமையின் ரூபம் எடுத்து தன்னை தாழ்த்தி உலகத்தில் வந்தார்.

தேவனுடைய ரூபமாய் இருந்தும் தேவனுக்கு சமமாக இருக்கக்கூடிய அந்தஸ்து உடையவராக இருந்தும் அவர் இந்த லோகத்தில் வரும்போது அடிமையின் ரூபமெடுத்து தன்னை தாழ்த்தி இவ்வுலத்தில் வந்தார் என்று வேதம் சொல்லுகிறது. பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தி விட்டார். அவர் மூலமாகவே முழு உலகத்திற்கும் இரட்சிப்பு உண்டாயிற்று. இன்று நாம் இந்த அருமையான இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை அடைந்திருக்கிறோம் என்றால் அதற்கு காரணம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தாழ்மை தான். அவருடைய தாழ்மையான வாழ்க்கை தான். அவருடைய முன்மாதிரி தான். தன்னையே தாழ்த்திய தியாகத்தால் தான் நாம் இந்த நிலையை அடைந்திருக்கிறோம். இதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டவராகிய தேவனையே மாதிரியாக நாம் நோக்கி பார்க்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார். (சங்கீதம் 138:6)

கர்த்தர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அவர் தாழ்மையுள்ளவனையே நோக்கி பார்க்கிறார்.

சிலருக்கு கொஞ்சம் கல்வி, அறிவு, திறமை , ஐசுவரியம் வந்து விட்டால், அவர்கள் ஏழைகளை எட்டி கூட பார்க்கவே மாட்டார்கள், பெருமையுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், நம்முடைய ஆண்டவராகிய தேவன் எவ்வளவு உயர்ந்தவராக இருந்தபோதிலும் அவர் தாழ்மையானவர்களை நோக்கி பார்க்கிறார் ? யார் உள்ளம் தாழ்மை உள்ளதாக இருக்கிறது, யாருடைய எண்ணங்கள் , நோக்கங்கள் தாழ்மையாக இருக்கிறது, யாருடைய ஜீவியம் தாழ்மையாக இருக்கிறது என்பதை அவர் கவனிக்கிறவராக இருக்கிறார்.

சத்தத்தை கேட்கின்ற அருமையானவர்களே நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன?

உயர்வடைய வேண்டும் என்ற விரும்பும் அனைவரும், தன்னை தாழ்த்த வேண்டும் என்பது இறைவன் விருப்பம். அவர்கள் தானாகவே கர்த்தரின் கரத்தினால் உயர்த்தப்படுவார்கள்.

அவர் உங்களை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி அவரது பலத்த கரத்தில் அடங்கி இருங்கள் என்று சொல்லி இருக்கிறது அல்லவா?, நீங்கள் அந்த நிலைப்பாட்டை கடைப்பிடிப்பீர்கள் என்றால் கர்த்தர் உங்களை உறுதியாக எல்லாவற்றிலும் உயர்த்துவார், உயர்த்தி மேன்மைப்படுத்துவார் என்பதற்கு ஒரு சந்தேகமும் இல்லை.

சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார். (சகரியா 9:9)

அவர் நினைத்தால் எவ்வளவு பெரிய வாகனங்களிலும் வர முடியும். எவ்வளவு பெரிய மேன்மையான காரியங்கள் அவருக்குண்டு. எவ்வளவு மகிமையான உரிமைகள் அவருக்கு உண்டு, எதை நினைத்தாலும் அவர்

செய்யலாம் அல்லவா?, அவரோ எப்படி வருகிறார் என்று கவனித்து பாருங்கள்.

இதோ உன் ராஜா சாந்தகுணமுள்ளவரராய் கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி உன்னிடத்தில் வருகிறார் என்று தீர்க்கன் சொல்லுகிறார்.

சத்தத்தை கேட்கின்ற அருமையான பிள்ளைகளே!. வாழ்க்கையிலே தாழ்மையை நாம் வெளிப்படையாக மாதிரியாய் காண்பிக்க வேண்டும்.

நம்முடைய மனதின் மனத்தாழ்மையே பரிசுத்தத்தின் அலங்காரம் என்று ஒருவர் எழுதுகிறார். மகிமையான மனத்தாழ்மை எங்கிருக்கிறதோ அங்கு பரிசுத்தம் அலங்காரப்பட்டுக்கொண்டே இருக்குமாம். தேவன் அவர்களோடு சினேகமாக இருப்பார். தேவன் உயர்ந்தவராக இருந்த போதிலும் அவர் இப்படிப்பட்ட தாழ்மையானவர்களை நோக்கியே பார்க்கின்றார்.

உங்களுக்கு கர்த்தர் இன்று சொல்லுகிற வார்த்தை என்னவென்றால் , உயர்வடையவதற்கு உங்களைத் தாழ்த்திப் தாழ்மைப்படுங்கள். தன்னைத் தானே உயர்த்துகிறவன் மிகவும் தாழ்ந்தே போய்விடுவான் . எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் தன்னை தாழ்த்துகிறானோ, அதைவிடவும் மேலாக அவன் தேவனால் நிச்சயமாக உயர்வடைவான்.

எந்த ஒரு மனிதனும் தாழ்ந்து போக விரும்பமாட்டான் தான் உயர்வாக இருக்க வேண்டும். தன்னுடைய பிள்ளைகள் மேன்மையாக இருக்க வேண்டும் என்றும், குடும்பமே மேன்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புவான் .

சவுலின் தகப்பன் (அப்.பவுலின் முந்தைய பெயர்) பெரிய பணக்காரர். தன்னுடைய மகன் தான் பெரியவனாக இருக்க வேண்டும் என்பதற்காக ,உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதற்காக, தனது மகனுக்கு சவுல் என்ற பெயரைச் சூட்டினாரராம். சவுல் தேவனால் தொடப்பட்டபோது, அவர் தன்னை மிகவும் தாழ்த்தினார். சவுல் தன்னைப் பற்றி சொல்லும்போது நான் ஒரு பிரதான பாவி என்று அவர் சொன்னது மாத்திரமல்ல, தன்னுடைய பெயரையும் பவுல் என்று மாற்றிக்கொண்டார். ரோமன் கத்தோலிக்க பைபிளில் அவருடைய பெயர் சின்னப்பர் என்று எழுதப்பட்டிருக்கிறது . சின்னவர்(பவுல்) என்று தன் பெயரை மாற்றிக்கொண்டார் அவர்.

அப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தை உள்ள பவுல் அல்லவா உயர்த்தப்பட்டார். உயர்த்தப்பட்டார் மிகவும் உயர்த்தப்பட்டார் மூன்றாம் வானம் வரைக்கும் உயர்த்தப்பட்டார், பரம ரகசியங்களை அறிந்தார், கர்த்தருக்காக அரும் பெரும் காரியங்களை செய்தார். இன்றுவரை அவருடைய செயல்முறைகள், மகத்துவங்கள் வேதத்தில் எழுதப்பட்டு நம் கரத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது நாம் அதை வாசித்து தியானித்துக் கொண்டிருக்கின்றோம்.

அருமையானவர்களே, இவைகளை அறிந்திருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே, நம்மை நாம் தாழ்த்துவோம்.

கிறிஸ்துவை பார்க்கும்போது நாம் ஒன்றுமே இல்லை என்ற தாழ்மையான எண்ணம் நமக்குள் இருக்கட்டும். இப்படி நாம் செய்தால், கர்த்தர் மேன்மேலும், படிப்படியாக உயர்த்துவார். அவருடைய பலத்த கரத்தில் அடங்கி இருந்தால் அவருடைய கரம் நம்மை உயர்த்தி உன்னதம் வரைக்கும் உயர்ந்திருக்கச் செய்யும்.

சத்தத்தைக் கேட்கிற அருமையானவர்களே உயர்வடைய வேண்டுமா? நம்மை தாழ்த்துவோம். கர்த்தர் நம்மை உயர்த்துவதற்காக அவர் சித்தம் கொண்டு தாழ்மையுள்ளவர்களை தேடுகிறார். எங்கே தாழ்மையானவர் இருக்கிறார்கள் என்று உயரத்தில் இருக்கிற அவர் உயரத்தில் இருந்தாலும், தாழ்மையானவனை நோக்கி பார்க்கிறார் . துன்மார்க்கனை தூரத்திலிருந்து பார்க்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. இந்த பிரகாரம் நாம் செய்வோம். நாம் ஆசிர்வதிக்கப்பட , கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள நம்மை தாழ்த்துவோம்.

நம்மை கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

கர்த்தர் இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

****

நீங்கள் வாசித்த இச்செய்தி அப்போஸ்தலர். S. ஏசுதாசன் அவர்கள் நம்பிக்கை TVல் பிரசங்கித்த சுவிசேஷ செய்திகளாகும்.

பிரதி வியாழன் காலை 7-30 மணி முதல் 8.00 மணிவரை நம்பிக்கை TV - ல் ஒளிபரப்பாகும் இந்நிகழ்ச்சியை தவறாது பாருங்கள்.

NJCNGL - என்ற youtube Channel - ல் ஞாயிறு பரிசுத்த ஆராதனை வீடியோ செய்திகளையும், நம்பிக்கை TVல் பிரசங்கித்த வீடியோ செய்திகளையும் காணலாம்.

நேரடி தொடர்புக்கு, ஜெப உதவிகளுக்கு குறிப்பிடப்பட்ட எண்களை தொடர்புகொள்ளுங்கள்.